MAY 2023

U/ID 33218/UCT4C/ UCL5A

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. மூவேந்தர்களின் போர்த்திறம் பற்றிக் கூறும் நூல் எது?

2. முத்தொள்ளாயிரத்தின் பாடல் அமைப்பைக் கூறுக.

3. பரணி பாடுவதில் வல்லவர் யார்?

4. நந்திவர்மன் எந்நாட்டை ஆட்சி செய்து வந்தான்?

5. அந்தாதித் தொடையில் அமையப் பாடப் பெறும் சிற்றிலக்கிய நூல் எது?

6. பரணியின் இலக்கணத்தைக் கூறுக.

7. தமிழ்விடு தூதில், பட்டத்து ராணியாக வீற்றிருப்பவர் யார்?

8. பாண்டியர் மேல், கவிதை பாடிய புலவர்கள் யாவர்?

9. 'காவடி எடுத்தல்' - சிறு குறிப்பு வரைக.

10. ஆண்பாற் பிள்ளைத் தமிழின் பருவங்கள் யாவை?

11. கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடியவர் யார்?

12. கோட்புலி நாயனாரின் மகளிர் யாவர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

13. கலம்பக உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

14. முத்தொள்ளாயிரத்தின் பாடல் அமைப்பை விளக்குக.

15. களியாட்டம் குறித்து விளக்கி வரைக.

16. தூது செல்வதற்குரிய வழிமுறைகளை விவரி.

17. கழுகுமலை முருகன் கோவில் அமைப்பை அண்ணாமலையார் எவ்வாறு கூறியுள்ளார்?

18. ஆண்பாற் பிள்ளைத் தமிழின் பருவங்களை விளக்குக.

19. 'ஊசல்' எனும் கலம்பக உறுப்பை விளக்கி வரைக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

20. கலிங்கப் போர்க்களத்தைப் பேய்கள், காளிக்கு காட்டும் விதத்தை விவரி.

21. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம், 'காவடிச்சிந்து' என்பதை விளக்குக.

22. முத்தொள்ளாயிரம் காட்டும் பண்பாட்டுச் செய்திகளை தொகுத்துரைக்க.

23. நந்திவர்மனின் வீரத்தை, நந்திக் கலம்பகம் வழி நின்று விளக்கிக் கட்டுரை வரைக.

24. முருகப் பெருமான் அருள்பெற்று, அடியார்கள் அடையும் இன்பம் குறித்து விளக்குக.

———————